செ.வெ.எண்: 19 நாள்:07.08.2019

# பத்திரிக்கைச் செய்தி

பொது விநியோகத் திட்ட செயல்பாட்டிலும், நியாய விலை கடைகளின் செயல்பாட்டிலும் தூய்மையான நடைமுறையை கொண்டு வரும் வகையில் நியாய விலை கடைகளின் பதிவேடுகளை சமூக தணிக்கைக்குட்படுத்த அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தினை 15-08-2019 (சுதந்திர தினம்) அன்று நடைபெறவுள்ள கிராம சபை கூட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. அன்றையதினம் கிராமசபை கூட்டத்தில் கிராமப்புறங்களில் செயல்படும் நியாய விலை அங்காடிகளில் பயன்படுத்தப்படும் அனைத்து பதிவேடுகள் மற்றும் முன்னுரிமை குடும்ப அட்டை (PHH) பயனாளிகளின் பட்டியல் சமுதாய தணிக்கைக்குழுவின் தணிக்கைக்கு வைக்கப்பட்டு, தணிக்கை செய்யப்படும். எனவே பொதுமக்கள் கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்டு, பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.